**Clarion Call – III**

எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய விவசாய சமூக மக்களே! உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

நமது நாடு சுதந்திரம் அடைந்து 79–80 ஆண்டுகள் ஆகியும், இந்த நாட்டில் விவசாயிகளின் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிப்பது இல்லை இந்த அரசுகள். மில்கள், பேக்டரிகள், கம்பெனி முதலாளிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்யும் உரிமை உள்ளது இந்த நாட்டில். ஆனால் விவசாயிகள் தங்கள் நிலத்தில் வேகாத வெய்யிலில் வியர்வை சிந்து பாடுபட்டு விளைவித்த பொருட்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்யும் உரிமை இல்லை இந்த நாட்டில். இதற்குக் காரணம், விவசாயிகள் அரசியல்வாதிகள், அரசுகள் கொடுக்கும் இலவசங்களை வாங்குவதாலே இந்த நிலைமை.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்" என்று வள்ளுவப் பெருந்தகை விவசாயிகளின் பெருமையை மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளார். ஆம், விவசாயிகள் மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ்பவர்கள்; மற்றவர்களிடம் வாங்கி வாழாதவர்கள். அதுமட்டுமல்ல, "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்பதே விவசாயிகளின் இலக்கணமாகும். ஆம், விவசாயிகள் தங்கள் நிலத்தால் தாங்கள் மட்டும் வாழ்வதில்லை; மற்றவர்களை வாழ வைக்கிறார்கள். நிலத்தில் பாடுபடும் விவசாயத் தொழிலாளர்களைக் காப்பாற்றுகிறார்கள். வயலில் உழுது பயிரிட உதவிய பசுமாடுகளைக் காப்பாற்றுகிறார்கள், ஆடுகளைக் காப்பாற்றுகிறார்கள், பறவைகள், புழு, பூச்சிகள் விவசாயிகளின் நிலங்களால் உயிர் வாழ்கின்றன. திருடர்களிடமிருந்து தனது உடமைகளைப் பாதுகாக்கும் நாய்களைக் காப்பாற்றுகிறார்கள். மரம், செடி, கொடிகளைக் காப்பாற்றுகிறார்கள்.

இப்படி ஒரு விவசாயி, தான் மட்டும் வாழாமல் மற்றவர்களையும் மற்ற ஜீவராசிகளையும் காப்பாற்றுவதால், விவசாயி பிறவியிலேயே ஒரு சோசியலிஸ்ட் (Socialist), சமதர்மவாதி, சர்வோதயவாதி, சர்வ உபகாரவாதி.

இப்படிப்பட்ட பெருமைமிகு விவசாயிகள் இலவசங்களுக்காக அரசியல்வாதிகளிடம் (நமது வேலை ஆட்களிடம்) கெஞ்சிக் கொண்டிருப்பது என்னை வேதனை அடைய வைத்துள்ளது. காரணம், நான் சிறுவயது முதலே மண்வெட்டி எடுத்து விவசாயிகளின் நிலங்களில் பாடுபட்டே படித்து வாழ்க்கையில் இந்த நிலைக்கு உயர்ந்தவன். ஆதலினால், நான் விவசாயிகளின் வாழ்க்கையை நன்கு அறிவேன்.

(C.M. Raju)
Founder

(2)

டெல்லியில் விவசாயிகள் 6 மாதம் தங்கள் கோரிக்கைகளுக்காக போராடியபோது, அரசியல்வாதிகளோ, மந்திரிகளோ விவசாயிகளை நேரில் சந்தித்து குறைகளைக் கேட்கவில்லை. விவசாயிகளை உதாசீனப்படுத்தினார்கள் மக்களாட்சியில் மக்களே எஜமானர்கள். மக்களின் பிரதிநிதிகள், மந்திரிகள், பிரதமர், ஜனாதிபதி, அரசாங்க ஊழியர்கள், அதிகாரிகள் ஆகிய அனைவரும் மக்களின் வேலை ஆட்கள். வேலை ஆட்கள்தான் எஜமானர்களை (மக்களை) பார்க்க வர வேண்டும். அதுதான் உண்மையான ஜனநாயகம். இந்தியாவில் நடப்பது பணநாயகம்.

நமது ஓட்டுக்களைப் பெற அரசியல்வாதிகள் நம்மைத் தேடி வந்து, கூனிக் குறுகி, நம்மை வணங்கி, நமது ஓட்டுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஆனால், வெற்றி பெற்று பதவியில் அமர்ந்ததும், அரசியல்வாதிகள் / மக்கள் பிரதிநிதிகள் மக்களைப் பார்க்க வருவதில்லை. மக்களை (எஜமானர்களை) அவர்கள் வணங்குவதில்லை. மக்கள்தான் அவர்களை வணங்குகிறார்கள். இதுதான் நமது இந்தியாவில் நடக்கிறது. இது மாற்றப்பட வேண்டும். இதை மாற்றினால்தான் அரசியல்வாதிகள் / ஆட்சியாளர்கள் அனைவரும் தாங்கள் மக்களின் வேலை ஆட்கள் என்பதை உணர்வார்கள்.

ஆட்சியாளர்கள் டெல்லியில் போராடிய விவசாயிகளை சந்திக்காமல் உதாசீனப்படுத்திய அன்றே நான் உறுதி எடுத்துவிட்டேன். விவசாயிகளுக்கென்று ஒரு அமைப்பு / கட்சி அமைக்க வேண்டும். அமைத்து, அரசியல்வாதிகளை / ஆட்சியாளர்களை விவசாயிகளிடம் மண்டியிட வைக்க வேண்டும் என்று. அந்த எனது எண்ணத்தின் வெளிப்பாடே நான் இப்போது தொடங்கியுள்ள "We for Red India" என்ற அமைப்பு / கட்சி.

இந்த நாட்டை வேகாத வெயிலில் வயலில் பாடுபட்டு, இந்த நாட்டுக்கு சோறு போடும் விவசாயிகள் இந்த நாட்டை ஆள வேண்டும். AC பங்களாவில் இருந்து கொண்டு, AC கார்களில் பயணித்துக்கொண்டு, ஸ்டார் ஓட்டல்களில் சாப்பிட்டுக் கொண்டு, வருமான வரியை ஏய்த்துக்கொண்டு சுற்றித்திரியும் சினிமாக்காரர்கள் இந்த நாட்டை ஆளக்கூடாது. இதில் நான் உறுதியாக இருப்பவன். அதை நிலைநாட்டியே தீர வேண்டும் என்று இருப்பவன், எனது கொள்கையை ஆதரிக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் எனது அமைப்பில் / கட்சியில் சேரலாம். நாம் இந்த நாட்டை நாம் ஆளுவோம். நம்மை எவரும் ஆளக்கூடாது என்பதை நிலைநாட்டுவோம்.

"Jai Kisan Kai Kisan Mazdoor,
Ingulab Zindabad Ingulab Zindabad"

Your Comrade [signature]

(C.M. Raju, The Chalukya)
Founder